Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

Dr. E. Somasundaram, Ph.D.,
Public Relations Officer &
Professor (Agronomy)

Phone: 0422 - 6611302
Fax: 0422 – 2431821
E-mail: pro@tnau.ac.in

To
The Editor,

Date: 9-4-2013

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

## Turmeric Prices will be Stable from April to June

Turmeric, the yellow spice had witnessed a peak price of Rs.17,000 per quintal in November 2010 and started decline in prices to Rs.4600 in September 2011. For the past two months, the turmeric price is in uptrend due to low stocks and production.

According to trade sources, 37 lakh bags (80kg) are in stock in India while in Tamil Nadu alone it is reported to be around 14-17 lakh bags. As per trade sources, area under turmeric reduced by about 20 % in 2012-13 in India and in Andhra Pradesh, which stands first in turmeric production, the area has come down to 49,349 ha in 2012-13 from 66,000 ha in 2011-2012. But the yield is good compared to Tamil Nadu. In Tamil Nadu, it declined by around 40 per cent. In Erode district alone which is the major cultivator of turmeric, the area got reduced to 6318 ha in 2012-13 comparing 12,664 ha in 2011-12. National level production is expected to be 45-50 lakh bags.

Currently there is less arrivals in the market compared to last year. Also turmeric from Orissa, West Bengal are available in the market this year but the quality is not matching with Erode turmeric. Also one variety known as minisalem is arriving to Tamil Nadu especially from Maharastra at the price equivalent to Erode varieties. The quality characters are similar to Salem variety.

According to Spices Board sources, turmeric export in 2011-12 was estimated at 79,500 tonnes (49,250 tonnes in 2010-11) valuing Rs.734.34 crores (Rs.702.85 crores in 2010-11). In spite of increased export and reduced area under cultivation, due to higher stock position the price is not increasing. Farmers, traders and exporters are keen to know whether this price will sustain or will there be an increase or decrease in future? This is more crucial to take their storage / sales decisions.

To help the farmers and other stakeholders in turmeric, the NAIP-Domestic and Export Market Intelligence Cell functioning in Centre for Agricultural and Rural Development Studies, (CARDS) Tamil Nadu Agricultural University, Coimbatore analysed the monthly prices of turmeric that prevailed in Erode Regulated Market for the past more than 15 years. The Agricultural Market Intelligence Centre functioning in S.V Agricultural College, Tirupathi analysed the prices of turmeric that prevailed in Nizamabad market during last 15 years. The results of the analysis indicated that the prices will be moving around Rs.7500 - Rs.8500 per quintal till May, June 2013 and then the price movement will be based on the monsoon predictions. Hence farmers are requested to take their selling / storage decisions accordingly.

**For Marketing details contact:**

Domestic and Export Market Intelligence Cell,
Centre for Agricultural and Rural Development Studies (CARDS),
Tamil Nadu Agricultural University,
Coimbatore - 641 003.
Phone: 0422-2431405

Public Relations Officer

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tanu.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-4-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஏப்ரல் முதல் ஜூன் வரை மஞ்சள் விலை சீராக இருக்கும்

நறுமணப் பயிர்களில் முக்கியப் பயிரான மஞ்சளின் விலை, நவம்பர் 2010ல் குவிண்டால் ரூ. 17,000/- ஆக இருந்தது. பின்னர் படிப் படியாகக் குறைந்து செப்டம்பர் 2011ல் குவிண்டால் ரூ. 4,600/- என்ற நிலையை அடைந்தது. கடந்த இரண்டு மாதமாக மஞ்சளின் விலை ஏறுமுகமாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம் கையிருப்பு அளவு மற்றும் குறைந்த உற்பத்தியே ஆகும்.

வர்த்தகத் தகவல்களின்படி, இந்தியாவில் தற்போது 37 இலட்சம் மூட்டைகள் இருப்பில் உள்ளன (80 கிலோ). தமிழ்நாட்டில் மட்டும் 14-17 இலட்சம் மூட்டைகள் உள்ளன. 2012-13ல் இந்தியாவில் மஞ்சள் சாகுபடிப் பரப்பு 20 சதவீதம் குறைந்துள்ளது. மஞ்சள் உற்பத்தியில் முன்னணியில் உள்ள ஆந்திரப் பிரதேசத்தில் 2011-12 ல் 66,000 எக்டராக இருந்த சாகுபடிப் பரப்பு 2012-13ல் 49,349 எக்டராகக் குறைந்தபோதிலும் உற்பத்தி நன்றாக உள்ளது. தமிழ்நாட்டில் மஞ்சள் சாகுபடிப் பரப்பு 40 சதவீதம் குறைந்ததோடு உற்பத்தியும் மிகக் குறைந்துள்ளது. மஞ்சள் அதிகம் பயிரிடும் ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 2011-12ல் 12,664 எக்டராக இருந்த மஞ்சள் சாகுபடிப் பரப்பு 2012-2013ல் 6,318 எக்டராகக் குறைந்து விட்டது. தேசிய அளவில் இவ்வருட உற்பத்தி 45-50 இலட்சம் மூட்டைகளாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

தற்போது கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைந்த அளவே சந்தைக்கு மஞ்சள் வரத்து உள்ளது. ஒரிசா, மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்களிலும் மஞ்சள் பயிரிடப்படுகிறது. ஆனால் இதன் தரம் ஈரோடு மஞ்சளுக்கு ஒப்பிட முடியாது. மேலும் மினிசேலம் என்ற இரகம் மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டில் ஈரோடு இரகத்தின் விலைக்கு இணையாக விற்கப் படுகின்றது.

நறுமணப் பொருட்கள் வாரியத்தின் தகவலின்படி, 2011-12 ல் மஞ்சள் ஏற்றுமதி 79,500 டன்களாகவும் (2010-11ல் 49,250 டன்கள்) அதன் மதிப்பு ரூ.734.34 கோடியாகவும் (2010-11 ரூ.702.85 கோடி) இருந்தன. ஏற்றுமதி அளவு அதிகரித்து சாகுபடிப் பரப்பு குறைந்த போதிலும், கையிருப்பு அதிகம் உள்ளதால் விலை அதிகரிக்கவில்லை. விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் மஞ்சள் விலை நிலைத்திருக்குமா ? குறையுமா ? அல்லது வரும் மாதங்களில் உயருமா ? என்று அறிய ஆர்வமாயுள்ளனர்.

மஞ்சள் விவசாயிகள், விற்பனை மற்றும் சேமிப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், கடந்த 15 வருடங்களாக ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய விலைகளை ஆய்வு செய்தது. அவ்வாறே திருப்பதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா வேளாண் கல்லூரியில் இயங்கி வரும் வேளாண் சந்தைத் தகவல் மையம், நிஜாமாபாத் சந்தையில் 15 வருடங்களாக நிலவிய மஞ்சள் விலைகளை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின்படி தமிழ்நாட்டில் மஞ்சள் விலை மே, ஜுன் 2013 வரை ரூ.7,500/- முதல் ரூ.8,500/- வரை இருக்கும் அதன் பின் உள்ள விலை ஏற்றங்கள் பருவ மழையைப் பொறுத்தும், மஞ்சள் விதைப்பினைப் பொறுத்தும் முன்னறிவிப்பு செய்யப்படும். எனவே விவசாயிகள் மேற்கூறியவற்றிற்கு ஏற்றாற் போல் தங்கள் இருப்பு / விற்பனை முடிவுகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003.
தொலைபேசி: 0422-2431405

மக்கள் தொடர்பு அலுவலர்